மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

மலர் 10] பிரமாதீச ௵ — மாசி ௴ [இதழ் 4

[169-வது மூலிகை]



'நரி மிரட்டி'

விலை
50-காசு

உ
முருகன்.

‘மூலிகை மணி’

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

மாசி இதழில்

தொலைபேசி எண் : 726 த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

முருகா.



தமிழ் மருந்து!


மனப்பிணி தீர்த்திடும் மாமருந்து
மலைகள் தோறும் விளங்கிடும் தேன்மருந்து
முருகா வெனும் தமிழ்மருந்து (மனப்)

நினைப்பு நல்லதேயாக திருநீறணிந்து
நடக்கும் திருமுழுக்குதனில் மனம் குளிர்ந்து
வனப்புறு கந்தன் அலங்காரமும் கண்டு
வணங்கி உள்ளம் கசிந்துருக (மனப்)

கந்தர் அநுபூதி தினமும் ஓதி
கந்தர் அலங்காரம், கவசம் பாடி
சிந்தை இனித்திடும் திருப்புகழ் இசைத்து
தினமும் 'முருகா' வெனக் கூவிடுவோர் (மனப்)

[ச. விசுவநாதன்]

37, சொக்கப்ப நாயக்கர் தெரு, மதுரை-1.


நாங்க படிக்கது முன்னுக்கு வர்ரமாதிரி ஏதாவது இதழ்கள் கிடைக்குமா?
ஓ! ஏராளமா இருக்கே காதல் கலை நுணுக்க இதழ்கள்
பேசும் படம்
காதல்
பொம்மை
பருவம்
வாலிபம்
இன்பக்கதை கூறும் குமுதம்
"நியூவேவ்" நாவல்கள்
ஓடிப் போனவள் 0.50
காமக் கன்னி 0.75
கட்டிலா? தொட்டிலா?

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] பிரமாதீச ௵ — மாசி ௴ பிப்ரவரி-74 [இதழ் 4

சிந்தனைக்குரிய ... ... !

உலகில் மக்கள் சமுதாயம் ஒற்றுமையின்றி, பூசல், பொறாமை, கட்சி பிரதி கட்சி என்ற போராட்டங்களில் சக்தியைச் செலவழித்துக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக நமது இந்திய உபகண்டத்தில் குடியாட்சியிலே வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசிகள் ஏற்றமும், தேர்தல் கட்சிப் பூசல்களையும் பார்க்கும்போது எதிர்காலம் எதில் கொண்டுபோய் விடுமோ? என்ற அச்சத்தை உண்டுபண்ணுகிறது.

இந்த நிலையிலே இந்திய அரசு 212 கோடிக்கு புதிய வரிகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளதைக் காணும்போது நெஞ்சம் திடுக்கிடுகிறது.

அரசியல் தலைவர்களெல்லாம் விலைவாசி ஏற்றத்திற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஏதோ நொண்டிச் சாக்குகளைச் சொல்லி காரணம் காட்டுகிறார்களே தவிர, இந்த நிலைமையைச் சரிப்படுத்த வழி வகைகளைச் செய்யக் காணோம்.

குடும்பக் கட்டுப்பாடு: என்ற சட்டத்தைக் கொண்டு வந்து பலவிதங்களில் பிரசாரம் செய்தும், பணத்தைக் கொடுத்தும் மக்களை ஆசைக் காட்டி அறுவை சிகிச்சைகளைச் செய்து, மேலும் உழைக்கச் சக்தியற்றவர்களாக்கி வறுமையில் சிக்கித் தவிக்கும் நிலையை உண்டு செய்துவிட்டது ஒரு பக்கமிருக்க, கோடிக் கணக்கில் பணத்தை விரயம் செய்து வருவது அவசியமற்ற ஓர் செயலாகும் என்பதை நல்ல மனம் படைத்தவர்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்ளுவார்கள்.

திரைப்படம்: தற்காலம் வரும் திரைப்படக் காட்சிகளில் எல்லாம் இருவரையொருவர் கட்டிப்பிடித்து உருண்டு பிரளும் காதல் காட்சிகளைப் பார்க்கும் மக்கள் மனம் எந்தநிலையில் இருக்கும்! ஆபாசத் திரைப்படக் காட்சிகளுக்கு அளவே இல்லாமல் போய்விட்டது. நாள் தோறும் வயிற்றுப் பசியை தணிக்க வசதியில்லாத மக்களும் 1, 2, 3, 4 முறை ஆபாச படத்தைக் கண்டு ரசித்து, பாலுணர்ச்சிகளுக்குப் பலியாகி விடுகின்றனர். இதன் விளைவாக குடும்பக் கட்டுப்பாடு என்னவாகும்? சிந்தனை செய்து பார்ப்பவர்களுக்கு இந்த நிலை விளங்காமல் போகாது. எனவே, திரைப்படம் பல கோடி ரூபாயை விழுங்கி மக்களை கெடுக்கிறது என்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமா?

மருத்துவம்: மருத்துவத் துறையிலே பலவித விஞ்ஞான முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவுகள் அறுவை சிகிச்சை, ஊசி போடுதல், பயங்கர மாத்திரைகளை விழுங்குதல் இதனால் (அலர்ஜிக் ரியாக்ஷன்) என்ற பின் விளைவுகள் உண்டாகி, அரை நோயாளி முழு நோயாளியாக்கப்படுகிறான். அதுமட்டுமல்ல! "ஊசி போட்டவுடன் மரணம்" என்ற செய்திகள் அடிக்கடி நாள் ஏடுகளில் அடிபடுகின்றன. இத்தகைய மருத்துவத்திற்கு கோடிக் கணக்கில் ஆண்டுதோறும் பணம் செலவிடப்படுகிறது. இது நியாயமான செலவா?

தேர்தல்: என்பது ஒரு விளையாட்டுப் பொம்மை போலாகி விட்டது. அவசியமின்றி பதவி மோகத்தால் அடிக்கடி நடத்தப்படும் தேர்தல் களியாட்டங்களுக்கு பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுவதை நினைத்தால் வருத்தப்படாமலிருக்க முடியவில்லையே! இது தகுமா?

ஆக குடும்பக் கட்டுப்பாடு, திரைப்படம், ஆங்கில மருத்துவம், தேர்தல் செலவு இவைகளில் கண்ணுக்குத் தெரிந்து பலகோடி ரூபாய் செலவாகிறது. இப்படி பணம் விண் செலவாகிறதைக் குறைக்க எந்த அரசியல் தலைவர்களுக்கும் சிந்தனை செய்து பார்க்க நேரமில்லையே?

மக்களுக்கு ஆங்கில மருத்துவச் சிகிச்சையாலும், ஆபாசத் திரைப் படங்களாலும், தேர்தல் போட்டியால் கிடைக்கும் தேங்காய் துண்டுகளாலும் மூளை மழுங்கிவிட்டது. எது நல்லது? எது கெட்டது என்பதை சிந்தனை செய்து பார்க்க புலனாகும். உலகம் படுகுழியை நோக்கி நடை போடுகிறது: இதனைக் காலம் தான் காப்பாற்றவேண்டும்.

இந்தியக் குடியரசு நன்கு பரிசிலனை செய்து மேற்கூறிய ஊதாரித் தனமான செலவுகளைக் கட்டுப்படுத்தினால் துண்டு விழும் தொகைக்குப் பதிலாக உபரி தொகையாகவே மேலும் வரி போடாமல் மக்களுக்கு நன்மை செய்யலாம் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

உ

முருகா.

தணிகையில் நடைபெற்ற

தமிழ்த் திருமண விழா!

எல்லாம் வல்ல எந்தை முருகவேள் திருவருட்துணைகொண்டு என் அன்பு குருநாதர், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் திருமுன்னும் தலைமையிலும், கடந்த 10—2—74 அன்று,

என் தலைமகன்

செல்வன் : **க. வேங்கடேசன்,** எம். ஏ., பி. எஸ்ஸி.,

திரு அ. குப்புசாமி முதலியார் மகள்

செல்வி : **உருக்குமணி,** பி. ஏ., பி. டி.,

ஆகிய இருவருக்கும் பெரியோர் முன்னிலையில், தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

இந்தத் திருமணத்தை சிறப்பாக நடத்தி வைத்தவர், சென்னை ஆட்சி சொற்காவலர், திரு கீ. இராமலிங்கனார், எம். ஏ., அவர்கள், நமது பழமையான காலத்தில் தமிழர் திருமணம் எப்படி நடந்ததோ, அதே முறையில் அமைதியாகவும், தமிழ் மந்திரங்களைச் சொல்லி, சடங்குகளை குறைவின்றி செய்து வைக்கவும், உரிய நேரத்தில் எனது குருநாதர் சுவாமிகள் மங்கலநாணை எடுத்து மணமகனிடம் கொடுக்க, மணமகன் அதை வாங்கி, மணமகளுக்குப் பூட்டினான். கெட்டி மேளமும் கொட்டி முழங்கியது. மஞ்சள் அரிசியும், மலர்களும் மணமக்கள் மீது தூவப் பட்டன.

திட்டமிட்டபடி நிகழ்ச்சிகள் நடைபெற்று சரியாக காலை 9-30க்கு நல்லோர் புடைசூழ என் குருநாதர் தலைமையில் புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி அருளினார்கள். முதற்கண் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், 'தமிழ்த் திருமணம்' என்பது பற்றி விளக்கிப் பேசி மணமக்களை வாழ்த்தி அருளினர்.

பின்னர் இம்மண விழாவிற்கு நேரில்வந்து வாழ்த்துகூற இயலாத நல்லோர்கள் அனுப்பிய வாழ்த்துரைகளை, வேலூர் ஊரிசுக் கல்லூரி தமிழ்த் துறை துணைப் பேராசிரியர் திரு மா. வி. சுதாகர் அவர்கள் வாசித்தார். தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா, கல்விநெறிக் காவலர்

மாண்புமிகு நெ. து. சுந்தரவடிவேலு, டாக்டர் நா. சஞ்சீவி, எம். ஏ., எம். லிட்., பி. எச்டி., தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம், மற்றும் ஏராளமான நண்பர்கள், மூலிகை மணி சந்தா வாகக அன்பர்களின் வாழ்த்துக்களை எல்லாம் வாசித்தார்.

திருமணம் செய்து வைத்த திரு கீ. இராமலிங்கனார் மணமக்களை வாழ்த்தியதோடு அங்கு வந்திருந்தவர்கட்கெல்லாம் தமிழ்த் திருமணம் என்பது புதியது அல்ல! மிகப் பழங்காலத்திலிருந்தே வந்த பழக்க மாகும். இது எப்படி விடுபட்டுப் போயிற்று. எப்படி இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது என்பதையும் விளக்கிப் பேசி, இத்தகைய தமிழ்த் திருமணங்களை கண்ணப்பர் (என்னை சுட்டிக் காட்டி) புதுப்பிக்க முன் வந்தது பாராட்டக்கூடியதாகும். தமிழர்களாகிய நாம் தமிழ்ப் பழக்கங்களில் உள்ளதை ஒதுக்கி வைத்தல் கூடாது. இப்படித் தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதை நமக்கு முன்பு வாழ்ந்த பெரியோர்கள் செய்து காட்டியருளினர் எனவே இம்மாதிரி தமிழ்த் திருமணம் — தமிழ்க் கடவுளாம் திருமுருகன் கோவில் கொண்டருளிய திருத்தணிகையில் நடப்பது மிக மிக சிறப்பு என்று கூறி வாழ்த்தினர்.

அதன் பின்னர் வாழ்த்துக் கூறிய எனது நண்பரும் தமிழ்த் துறை தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை, பேராசிரியர் திரு அ. மு. பரம சிவானந்தம் அவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துக்களை நல்கியதுடன் (தனது அருமை மாணவன் என்ற முறையில்) கடமைகளையும் பொறுப்பு களையும் சுட்டிக்காட்டிப் பேசியது பாராட்டத்தக்கது. அடுத்து பேசிய சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்த் துறைப் பேராசிரியர், டாக்டர் சி. பாலசுப்ரமணியம், எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி., அவர்கள், வேலூர் ஊரிசுக் கல்லூரி துணை முதல்வர், பேராசிரியர் திரு அதிசயநாதன், எம்.ஏ., அவர்கள், பேராசிரியர் எஸ். சுந்தரராசன், பி. எஸ்ஸி., (ஆனர்ஸ்) அவர்களும் (இவர்களிடமெல்லாம் என் மகன் படித்தவன்) மணமக்களுக்கு நல்வாழ்த்துக்களையும் அறிவுரைகளையும் நல்கினர். இறுதியாக எனது மருத்துவத்துறை நண்பரும், (என் மகன் அன்பைக் கவர்ந்தவரும்) சித்த மருத்துவத் துறை இயக்குனருமான டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம். அவர்களும், என் நண்பர் வேலூர் மு. பெருமாள் முதலியார் அவர்களும் வாழ்த்திய பின்பு, "வள்ளித் திருமணம்" என்ற தலைப்பில் திரு வாரியார் சுவாமிகள் விரிவுரையாற்றினார்கள். இனிய தமிழ் மணம் அன்று நன்கு வீசியது.

என்னடா! இது தமிழ்த் திருமணமாம்! என்று எனது நண்பர் களில் சிலர் ஒதுங்கி இருந்து ஓரக் கண்ணால் பார்த்ததும், எனக்குத் தெரிந்துள்ளது. திருமணத்திற்கு ஒற்றர் போல வந்து கணக்கெடுத்துப்

போயிருக்கின்றனர். அவர்கட்கெல்லாம் நான் அன்புடன் தெரிவித்துக் கொள்வது என்னவெனில் நாங்கள் எல்லோருடனும் கூடி வாழ்வோம். அதே நேரத்தில் எங்களுக்கும் ஓர் மரபு உண்டு. அதன்படி பரம்பரை வழி வாழ எங்களுக்கும் உரிமை உண்டு. எங்கள் தமிழர் மரபுப்படி தமிழ்த் திருமணத்தை நடத்திவைத்தேன். தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் " தமிழ்த் திருமணம் " மடல் விட்டு, தமிழ்ச் சடங்கில் ஈடுபாடு கொண்டு திருமணம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு தமிழர் அல்லாதோர் இந்நிகழ்ச்சிகளைக் கண்டு ஒதுங்க வேண்டியதுமில்லை; நாங்கள் ஒதுக்கவும் மாட்டோம் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமுருகன் திருவருளால் எல்லாம் சிறப்பாக நடைபெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத் திருமணத் திற்கு நேரில் வந்து வாழ்த்தியவர்களுக்கும், நேரில் வர இயலாது தபால், தந்தி வழி வாழ்த்து மடல்கள் அனுப்பிய அன்பர்கள், பெரியோர்கள், பேராசிரியர்கள், நண்பர்கள் சந்தாதாரர்கள், மற்றும் வேலூர் வணிக வைசியர் சத்திர நிர்வாகிகள் நல் ஒத்துழைப்பிற்கும் என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஆசிரியர்

○

நினைவூட்டல்!

மூலிகை மணியின் சார்பில் ஆண்டு தோறும்
திருத்தணிகையில் நடந்துவரும்

சித்திரை முழுநிலவுப் பெருவிழா

(சித்ரா பௌர்ணமி விழா)

6—5—1974 திங்கட்கிழமை

14-வது ஆண்டாக வருகிறது என்பதனை
நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுவதுடன், அன்றைய தினம்

மூலிகை மருத்துவப் பயிற்சி

தபால் மூலம் கற்க ஆரம்பிப்பதை—அங்கு மாணவர்களை
வரவழைத்து திருவருள்முன் முதன் முதலாக
பாடங்களை துவக்க இருக்கிறோம் என்பதையும் அறியவும்.

— மேலாளர், மூலிகை மணி.

மூலிகை மணியின்
கடந்த ஒன்பதாண்டு மலரும், இதழ்களும்
கைவசம் சில பிரதிகளே உள்ளன.

முதல் ஆண்டு	மலர்-1,	இதழ்- 1, 2, 3, 4, 5, 7, 10, 11, 12
	மலர்-2.	இதழ்- 1, 2, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12
மூன்ருவது ஆண்டு	மலர்—3,	12 மாத இதழ்களும் உள்ளன.
நான்காவது ஆண்டு	மலர்—4,	,, ,,
ஐந்தாவது ஆண்டு	மலர்—5,	,, ,,
ஆருவது ஆண்டு	மலர்—6,	,, ,,
ஏழாவது ஆண்டு	மலர்—7,	,, ,,
எட்டாவது ஆண்டு	மலர்—8,	,, ,,
ஒன்பதாவது ஆண்டு	மலர்—9,	,, ,,

மேலே குறிப்பிட்ட மூலிகை மணி இதழ்களில் தேவையானவற்றை குறிப்பிட்டு, ஒரு புத்தகம் விலை 50-காசு வீதம் தொகையை M O. அனுப்பினுல் தபாலில் அனுப்பி வைக்கப்படும். V. P. P. கிடையாது.

மேலே குறிப்பிட்ட இதழ்கள், அனைத்தையும் ஒரே தடவையில் வாங்குபவர்கட்கு, பனிரண்டரை சதவீதம் கழிவு தரப்படும்.

□ ஆயுள் சந்தா ரூ. 150—00 செலுத்தி, சந்தா சேருவோர்க்கு மேல்கண்ட அனைத்து இதழ்களும் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்படும்

மூலிகை மணி மருத்துவப் பயிற்சி நிலையம்

தபால் மூலம் பாடப் பயிற்சி — (ஓராண்டுக் கல்வி)

அநேகர் வேண்டுகோளுக்கிணங்க சித்திரை மாத முதல் மூலிகை, சித்தமருத்துவப் பாடங்கள் துவக்கப்பட இருக்கிறது. இதில் மாணவ, மாணவியர்களாகச் சேர்ந்து தபால் மூலம் பயின்று சித்த மருத்துவராகி, சேவை செய்ய ஓர் அரிய வாய்ப்பாகும். பயிற்சியின் இறுதியில் 15 நாட்களுக்கு நேர்முக வகுப்பும் — மூலிகைகளை அறிமுகம் செய்து, தேர்வு நடத்தி நற்சான்றிதழ்களை நமது மூலிகை மன்னர் கண்ணப்பர் அவர்கள் நேரில் வழங்குவார். விண்ணப்பதாரர் ரூ. 1—00 மணியார்டர் செலுத்தி, விண்ணப்ப விபரத்தாளை பெற்று மற்ற விபரங்களை அறிந்து, சேர்ந்து எளிய முறையில் உயர்ந்த மருத்துவத்தைக் கற்று மருத்துவராகப் பணி புரியலாம்.

விபரங்கட்கு :

மூலிகை மணி மருத்துவப் பயிற்சி நிலையம்

P. B. No. 126 — வேலூர். (வ. ஆ.)



‘நரி மிரட்டி’

(169-வது மூலிகை)

நரி மிரட்டி என்ற மூலிகையும் உண்டு என்பதைப்பற்றி முன்னம் ஒரு தடவை தினமணி சுடரிலே குறிப்பிட்டோம். இதற்கு இப்படி ஓர் பெயர் வரக் காரணமென்ன? செடியாக வளரும் இந்த மூலிகையில் வேர்கடலை போல, பச்சை நிறமான காய்கள் காய்க்கும்.

இந்த மூலிகை பொதுவாக குத்துச்செடிகள் வளரும் காடுகளில் தாம் தன்னிச்சையாகவே வளரும். இந்த பச்சைநிறக் காய்கள் உலர்ந்த பின்பு, அதனுள் இருக்கும் விதைகள் எல்லாம் ஆடும் தன்மையுடையதாகும். எனவே இந்தக் காய்கள் காற்றில் ஆடும்போதெல்லாம் கிலு கிலு என்ற ஓர் ஓசையைக் கிளப்பி ஒலியை உண் டாக்கும். இந்த ஒலி அந்த குத்துச்செடி காடு களில் மறைந்துவாழும் காட்டு நரிகளின் மனதில் ஒருவித பயத்தை உண்டுபண்ணி விடுமாம். ஆமாம்! குப்பைமேனியைப் பற்றி வாசித்த அன்பர்கள், குப்பைமேனிக்கு “பூனை வணங்கி”

என்ற பெயர் எப்படி வந்ததோ, அப்படி இந்த நரிமிரட்டி — என்ற மூலிகைக்கு அகராதியில் 'வட்டக் கிலுகிலுப்பை' என்ற பெயரும் உண்டு. கிலு கிலு என்ற ஒலியை விதையின் மூலம் கிளப்புவதால் வட்டக் கிலுகிலுப்பை என்ற பெயராயிற்று.

பொதுவாக இதனை கிலுகிலுப்பை, வெதுப்படக்கி என்று கூறுவர். செடியாக வளரும் இது ஓர் கற்பமூலிகை என்ருல் மிகையல்ல! இதன் பூ அவரைக் கொடியில் பூக்கும் பூவைப் போன்று வெள்ளையாகவும் நடுவிலே நீல நிறமாகவும் அடுக்கடுக்காகவும் பூக்கும். மொட்டு மஞ்சள் நிறமாகவும், காய்கள் பச்சை நிறமாக கொத்துக்கொத்தாக காய்த்துக் கீழ் நோக்கித் தொங்கும். இந்தக் காய்கள் காய்ந்தவுடன் பச்சை நிறம் மாறிவிடும். விதைகள் உள்ளே இருப்பதால் காற்றில் இந்தச் செடி அசையும்போது சலங்கை ஒலி போல் கிளம்பும்.

பொதுக் குணமும் பயனும்

இதன் குணம் மிகவும் சிறப்புடையது. உமிழ்நீரைச் சுருக்கும்; நுட்புழுக்களை கொல்லும்; சொறி, சிரங்கு, கரப்பான் ஆகியவைகளை நீக்கும்.

சொள்ளு ஒழுகுதல் நிற்க

நாவில் இருந்து உமிழ்நீர் சுரந்து தானுகவே ஒழுகும். குழந்தை களுக்கும், பெரியோர்களுக்கும் இதன் இலையை இடித்து 1 கைபிடி மண் சட்டியில் போட்டு ஒரு குவளை நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி காலை மாலை இருவேளையாக குடித்துவர வாயில் சுரந்துவரும் நீர் நிற்கும். "ஜொள்ளு வாயன்" என்று சொல்லும் அதிக நீர் சுரக்கும் வாயில் நீர்சுரப்பது நிறுத்தும் குணமுடைய மூலிகை இது ஒன்றேயாகும்.

சொறி சிரங்கு நீங்க

நரிமிரட்டி இலையை அரைத்துக் கற்கம் செய்து நெல்லிக்காய் அளவு உள்ளுக்கு பாலுடன் சாப்பிட்டு, மேலுக்கும் பூசிவர அவை நீங்கிவிடும்.

குழந்தைகள் தோஷம் நீங்க

கை குழந்தைகளுக்கு காணும் தோஷங்கள் நீங்க இதன் இலையை அரைத்து முகம் உடம்பு முழுவதும் பூசி அரை மணி கழித்து வெந்நீரில் குளிப்பாட்ட தோஷங்கள் எல்லாம் நீங்கிவிடும்.

கரப்பான் கடுவன் நீங்க

கடுக்காய்த் தோல், நரிமிரட்டி இலை இவைகளை ஒன்றாய் அரைத்து கால் கடுவன், மண்டை கரப்பான் ஆகியவைகளில் இரவு நேரம் போட்டு, பகல் நேரம் கழுவிட நாள்பட்ட கரப்பான் வியாதிகளும் நீங்கிப் போகும்.

உடம்பு ஊறல்

உடம்பில் எப்போதும் நமைச்சலாகி சொறிபவர்கள், இந்த நரிமிரட்டி இலையை அரைத்து தண்ணீரில் கலந்து 2 மணி கழித்து உடம்புக்கு குளித்துவர நமைச்சல் யாவும் நீங்கிவிடும்.

நுட்புழுக்களைக் கொல்வதில் நரிமிரட்டி நிகரற்றது. ஆகையால், பரம்பரைச் சித்த மருத்துவர்கள் இதனை தோல் சம்மந்தப்பட்ட நோய்களுக்கு பலவித மருந்துகளுடன் சேர்த்து வழங்குவார்கள். சித்தர்களும் இதனைக் கையாண்டு சித்தி பெற்றுள்ளதாகத் தெரிகிறது. எனவே, நரிமிரட்டி என்ற இந்த மூலிகையை நாமும் பயன்படுத்தி நல்வாழ்வு பெறுவோமாக !

○

STATEMENT

Statement of ownership and other particulars about the MOOLIGAI MANI as required under Rule 8 of the Registration of News paper (Central) Rules 1966.

Form IV

1. *Place of publication*	VELLORE-1. N. A.
2. *Periodic of publication*	Monthly (Tamil)
3. *Printer's Name*	A. R. Kannappar,
Nationality	Indian
Address	No. 4, Sadukara Madam IInd Street, Salavanpet, Vellore-1. N. A.
4. *Publishers's Name*	A. R. Kannappar,
Nationality	Indian
Address	59, Masilamani Mudali St., Vellore-1.
5. *Editor's Name*	A. R. Kannappar,
Nationality	Indian
Address	59, Masilamani Mudali St., Vellore-1.
6. *Name & Address of individuals who own the news paper & partners of share holders holding more than one percent of the total capital.*	A. R. Kannappar, 59, Masilamani Mudali Street, Vellore-1. N. A.

I, A. R. Kannappar hereby declare the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 28—2—74.

(Sd.) A. R. KANNAPPAR,
Publisher.

வாசக அன்பர்கட்கு மட்டும்

எமது தயாரிப்புகள் :

அக்டோபர்—'73 முதல்

[விலைவாசிகள் ஏற்றக் காரணத்தால் சிறிது விலை கூட்டப்பட்டுள்ளது]

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து, ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலை முடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் ஒரு முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர்கள் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை, ரூ. 3—00

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபக மறதி, வழுக்கைத்தலை, அதிஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

முசுமுசுக்கைத் தைலம்

தலைக்குத் தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகால ரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காச நோயுடையவர்களுக்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும், பல் தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை ரூ 1—00

காது நோய் எண்ணெ

காதில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், காது வலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 3—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாகத் தேறலாம்.

40 நாள் மருந்து பாக்கெட் விலை ரூ 4—00

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்நானமாகவும், தினம் தடவிக் கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 5—00

புதிய மருந்துகள் விபரம் :

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்நானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 5—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகமாக பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும், காபி, டீ, போன்ற பானங்கட்குப் பதிலாக இதனை காபி போல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர, தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 5—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 2—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3—00 ம், 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4—00 ம் தபால் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

மூலிகை அகராதி

— முன் மாதத் தொடர்ச்சி

கூவைக் கிழங்கு

வேறு பெயர்கள் :— அரருட்கிழங்கு, கூவாமாக்கிழங்கு, கூகைக் கிழங்கு. ஆங்கிலம் : குர்குமா அகஸ்டி போலியா, தெலுங்கு : அரருட் கிட்டாலு, மலையாளம் : கூவா கிழான்ன, கன்னடம் : கூவி கெட்டா, இந்தி : டிக்கார், சமஸ்கிருதம் : வளையாதி அட்டி-கி-கிட்டி,

விபரம்

இது அரோருட் என்ற கிழங்கு இனத்தைச் சேர்ந்தது. இதிலிருந்து மா எடுத்து அரோருட் என்ற மாவு செய்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள். இதுவும் தென்னிந்தியாவுக்கே உரிய மா இன கிழங்கு வகையாகும். இது குறிப்பாக சேலம் மாவட்டத்தில் அதிகமாகப் பயிராக்கப் படுகிறது. ஐவ்வரிசி, டபாக்கி அரிசி என்ற மா இனங்களும் இந்த வகை கிழங்குகளிலிருந்து தயாரிக்கப் படுகிறது. உடலுக்கு மிகுந்த சக்தியும் பலத்தையும் தரக்கூடிய மா இனங்களில் இதுவும் ஒன்றாகும்.

உபயோக உறுப்பு — கிழங்கு

சுவை : இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணுதிசயம்

குளிர்ச்சியுண்டாக்கி, உள்ளழலாற்றி, பலகாரி, உடல் உர மாக்கி, சிறுநீர் பெருக்கி, உடல் தேற்றி.

கேழ்வரகு

வேறு பெயர்கள் :— இராகி, கேப்பை, பஞ்சந்தாங்கி ராகி, கெவுரு ஆங்கிலம் : ராகி, எலுசின் கோரகானு.

விபரம்

இந்தியாவின் தானிய வகைகளில் இதுவும் ஒன்று. மழையின்றி விளைபொருள் அரிதாகிவிட்ட காலங்களில் இது பெரும்பாலும் உதவுகிறது. அது மட்டுமல்ல, மற்றைய உயர்ந்தரக நெல், தானிய வகைகளைப் பயிரிடும் மக்கள் இதனைத் தான் முக்கிய உணவாகக் கொள்ளுகின்றனர். அதிக வருவாய் இல்லாத ஏழை மக்கள் கேழ்வரகு களி, கூழ் ஆகச் செய்து சாப்பிடுவார்கள். எனவே, உடலுக்கு எளிய முறையில் மிகுந்த சக்தி கொடுக்கும் உணவுப் பொருள்களில் கேழ்வரகு தலையாய பொருள் ஆகும். ஆகையால் இதற்கு பஞ்சந்தாங்கி என்ற வழக்குப் பெயரும் உண்டு.

உபயோக உறுப்பு — விதை (கேப்பை)

சுவை : இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணாதிசயம்

மலமிளக்கி, துவர்ப்பி, குளிர்ச்சியுண்டாக்கி, பலகாரி, உடல் உரமாக்கி, வெப்பமகற்றி.

கொஞ்சி

வேறு பெயர்கள் :— காட்டுக் கொஞ்சி, ஆங்கிலம் : லிமோனியா பென்டாபில்லா.

விபரம்

குத்துச் செடி காடுகளில் வளரும் இந்த கொஞ்சி தமிழகத்திற்கே உரியதாகும். இதன் பழத்தை மாடு மேய்க்கும் சிறுவர்கள் பசியாற பரித்துச் சாப்பிடுவார்கள். இதன் பட்டையை மலமிளக்கும் உபசரக்காக சித்த மருத்துவர்கள் பயன்படுத்துவார்கள். எனவே இதன் மற்றைய மொழிகளின் பெயர் கிடைத்தில.

உபயோக உறுப்பு — பட்டை, பழம்

சுவை : துவர்ப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

துவர்ப்பி, வெப்பகற்றி, மலமிளக்கி, நீர் மலம் போக்கி, அகட்டுவாய்வகற்றி, சிறுநீர் குறைபடப் போக்கி.

(தொடரும்)

உ
முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது கூடிய வரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

• • •

கே: எனக்கு வயது 37. திருமணம் ஆனவன். இரண்டரை வருடங்களாக அதிக அசதியும், உடல் மெலிந்தும், இருந்து வருகிறது. டாக்டரைக் கேட்டதில், உடலில் சர்க்கரை வியாதி என்று கூறிவிட்டார்கள். எந்தவித நோயும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், உடல் மெலிவும் அசதியும் அதிகமாகி வருகிறது. இதற்கு தங்கள் ஆலோசனை பெற விரும்புகிறேன்.

ப: முதலில் சர்க்கரை இருக்கிறதா என்று நன்கு அறிய வேண்டும். அதாவது அதிக பசி, அதிக தாகம், அடிக்கடி நீர் போதல் சிறுநீர் கழிந்த இடத்தில் ஈ மொய்க்கும், சிற்றெறும்புகள் சேரும். இதுதான் சர்க்ரை வியாதிக்கு அடையாளம். வெறும் நீரைக் காய்ச்சி பார்த்தால் மட்டும் போதாது. நீங்கள் நீர் ஆரைக்கீரையைத் தவறாமல் பகலுணவில் 40 நாள் சேர்த்து பின்பு தெரிவிக்கவும்.

கே: என் வயது 30. எனக்கு மாதம் ஒரு முறையாவது தொண்டையிலும் வாயிலும் குழிப்புண்கள் வந்து சாப்பிட முடியாமல் சிரமத்தைக் கொடுக்கிறது. ஆசிரியர் வேலை செய்பவன். சில

சமயம் பேசுவதற்குக் கூட முடியாமல் போய் விடுகிறது. இது என்ன நோய்? மருத்துவம் கூறவும்.

ப: தொண்டை - வாய் ஆகிய இடங்களில் குழிப்புண் வருவது பெண் தொடர்பால் வரும் மேக ரணக்குழிப்புண் வந்து வந்து மறையும், வந்து வந்து மறையும் மேக வியாதி என்பதாகும். இதற்கு எமது சிறப்பான தயாரிப்பு மகாமூலிகை எண்ணெயே சிறப்புடையது. கை பக்குவ முறைகளால் நோய் முற்றும் தீராது.

கே: என் வயது 21. பி. யு. சி. வரை நல்லவிதமாக படித்து தேர்ச்சியடைந்து பட்டப்படிப்பில் இரண்டாவது ஆண்டு படித்து வரும் எனக்கு வகுப்பு நேரத்தில், முந்தியிருந்ததைப்போல ஆர்வம், ஆசிரியர் சொல்வதை கிரகிக்கும் தன்மை, சுறுசுறுப்பு, மனத் தெளிவு இல்லை. படிப்பில் நல்ல தேர்ச்சியும், பட்டப்படிப்பு தேர்வில் முதலிடம் பெறவும், எனக்கு ஒரு வழி கூறவும்.

ப: வல்லாரை என்ற மூலிகையை தினமும் பகல் உணவில் நெய்விட்டு வதக்கி முதல் உணவில் சேர்க்கவும். இப்படி 40 நாள் சாப்பிட நல்ல சுறுசுறுப்பும் படிப்பில் ஆர்வமும் உண்டாகும். இது உங்களுக்கு கிடைக்கவில்லையானால் எம்மிடம் "வல்லாரைத் திப்பிலி" உள்ளது. இந்த மாதிரி குணங்களுக்கு ஏற்ற மருந்து. பார்சல் செலவு உட்பட ரூபாய் 6—00 அனுப்பினால் உமக்கு சாப்பிடும் முறையுடன் அனுப்பி வைக்கிறோம். பரிட்சையில் முதன்மையான மார்க்கு வாங்கு வாய் என்பதை அனுபவம் உணர்த்தும்.

கே: என் வயது 22. பி. ஏ. பட்டப் படிப்பில் முதலாண்டு படித்து வருகிறேன். கடந்த மூன்று மாத காலமாக இருதய வலி, முதுகுவலிக் குத்தல், மயக்கம் உண்டாகிறது. தோள்பட்டை, துடைகளில் தடிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. சீரண சக்தி குறைந்துவிட்டது. இரவில் கை கால் உதரல் ஏற்படுகிறது. இதற்கு ஒரு மருத்துவம் கூறவும்.

ப: உங்கள் உடம்பில் இருந்து (சிவ சக்திகள்) உயிர் அணுக்கள் உம்மை அறியாமலே வெளியேறி இருக்கும்! இல்லையெனில் இருதய வலி, முதுகு வலி, குத்தல், மயக்கம், தோள்பட்டை வலி, துடைகளில் தடிப்பு 22 வயதில் உண்டாகி இருக்காது. இதற்குத் தகுந்த மருந்து நமது "மூலிகை காயகல்பமே" சிறப்புடையது. உடல் நலம் உண்டாகி

பழைய சக்தியை ஊட்டும். எனவே நீங்கள் ஒரு முறை வந்து கை நாடி காண்பித்து தகுந்த மருந்துகளை நேரில் பெற்று நலம் பெறலாம். வசதி இருப்பின் நேரில் வரவும்.

கே : நான் பி. யு. சி. படிக்கும் மாணவி. யாராவது சிரிப்பு உண்டாக்கும் நிகழ்ச்சிகள், கதைகள் சொன்னாலும் சோகமான சம்பவங்களைச் சொன்னாலும் உடனே என் கண்களில் தாரையாக நீர் வடிகிறது. மனவுறுதி பெற வழி சொன்னாலும், மன ஆறுதல் அடைவதில்லை. கண்ணில் நீர் சொரிந்து அழுகைதான் வருகிறது. இதுவும் ஓர் கண்ணோயாக இருக்கும் என நினைக்கிறேன். இதைப் போக்க ஒரு வழி கூறவும்.

ப : இது கண் நோய் அல்ல. திரைப்பட கதைகளைக் கண்டு கண்டு உமது மனம் மிகவும் கோழையாகி விட்டது! இதனால் மன உறுதி தளர்ந்து விட்டது. இனி திரைப்படம், காதல், கவிதைகளை கனவிலும் நினையாமல், வாழ்க்கையில் இறைப்பற்று பெரியோர் சொல் கேட்டு, மனதை அடக்கி வாழ கற்றுக்கொண்டாலே போதும். அழுகை வருவது மனம் தளர்ந்து போனதால். அதை அடக்க, உலக இன்பங் களான திரைப்படம், இருகுரல் இசை, நாவல், ஆபாச காதல் கதைகள் ஆகியனவற்றை வெறுக்க கற்றுக் கொண்டாலே முருகன் அருள் புரிவான். மனமும் திடமாகி விடும். மருந்து ஒன்றும் வேண்டாம்.

கே : ஆஸ்துமா, நீரிழிவு போன்ற நோய் கண்டவர்கள் ஆங்கில மருத்துவம் பார்த்து அலுத்துப்போய், சித்த மருத்துவத்தில் குணம் காண விரும்புவோர், முதலில் அருகம்புல் முறிவு மருந்து சாப்பிட்ட பின்பு தான் மருந்தை தொடங்க வேண்டுமா? முறிவு மருந்தை சாப்பிடுகிற 10, 15 நாட்களில், நோய் தீவிரமாக இருப்பின், அருகம்புல் - மிளகு - சிரகம் முறிப்புடன், நோய்க்கான மருந்தையும் கூடவே சாப்பிடலாமா? விளக்கம் தரவும்.

ப : நோய்க்கான மருந்தை நேரடியாக ஆரம்பிப்பதால், ஏற்கனவே உடலில் தங்கிய மருந்துகளின் வேகமும் சேர்ந்து உடல் மிகவும் கெட்டுப் போகும். எனவே, அருகம்புல் 1 கைபிடி அளவு மிளகு 6, சீரகம் 2 சிட்டிகை, இவைகளை காலையில் எடுத்து மைபோல் அரைத்து நெல்லி அளவு உருண்டையை வாயிலிட்டு பால் 200 மில்லி சாப்பிட்டு வரவும். இப்படி 10, 20 நாள் வரை சாப்பிட ஏற்கனவே சாப்பிட்ட ஆங்கில மருந்துகளின் வேகம் தணியும். இடையில் நோய்

வேகம் அதிகரித்தால் விரைவில் நோய் தணிந்து விடும் என்று பொருள். அந்த நேரம் வேறு மருந்துகளைச் சாப்பிட்டால் நோய் முற்றும் குண மாகாது. சிக்கலாகிவிடும் என்பது பொருள்.

கே : என் அண்ணிக்கு முதல் பிரசவமாகி 33 நாட்கள் ஆகிறது. தங்கள் மாத இதழில், "தாய்ப் பால் ஊட்டும் பெண்கள், வாய்வு பொருட்களை நீக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக் கிறீர்கள். முருங்கைக்கீரை வாய்வு அதிகம் உடையது என்று எனது பாட்டியார் கூறக் கேட்டுள்ளேன். எனவே, அந்தக்கீரையை சேர்க்கலாமா ? கூடாதா ? என்பதை தெரிவிக்கவும். கீரை, மோர், சேர்த்தால் குழந்தைக்கு சளி பிடிக்கும் என்றும் கூறுகிறார்கள். மருத்துவ விளக்காக இருக்கும் தாங்கள் விளக்கம் தரவும்.

ப : முருங்கைக் கீரை வாய்வு இல்லை ! ஆனால் முற்றிய முருங்கை காய் பித்த வாய்வு குணமுடையது. இதனால் மார்பு வலியும் வேறு பல நோய்களும் உண்டாகும். வாதநாராயணன் கீரை, லஞ்சமுண்ட கீரை, அரைக்கீரை இவைகள் வாய்வு நீக்கும் குணமுடையது. இதனால் கெடுதல் ஒன்றுமில்லை. நல்ல உயர்ந்தரக பெருங்காயத்தை சமையலில் ரசம், குழம்பு, மோர் இவைகளில் சேர்த்தால் வாய்வு நீங்கி உடல் நல்ல ஆரோக்கியம் பெறும். வாழைத்தண்டு, பூ, பிஞ்சு, அவரைப் பிஞ்சு, சேப்பங்கிழங்கு இவைகளும் உடம்புக்கு மிகவும் நல்லதே. எனவே, மேற்குறிப்பிட்டவைகளில் ஏதாவது ஒன்றைச் சேர்ப்பதுடன் இஞ்சி, கொத்தமல்லி, புதினா, கறிவேப்பிலை, சீரகம், பூண்டு, மிளகு ஆகியவை களையும் தாராளமாக சேர்ப்பது நல்லது.

கே : எங்கள் ஊர் (குடியாத்தம்) அரசினர் மருத்துவ மனை யில் புதியதாக "சித்த மருத்துவ பகுதி" கடந்த 4-மாதங்களாக நடந்து வருகிறது. பல ஆண்டுகளாக ஆங்கில மருந்து, மாத்திரை சாப்பிட்டு, 'இன்சுலின்' ஊசி போட்டு வரும், சர்க்கரை நோயாளி ஒருவர் சித்த மருத்துவம் செய்துக்கொள்ள விரும்பி, அந்த பகுதி யிலிருக்கும் மருத்துவரிடம் போனார். அங்குள்ள சித்த மருத்துவர் அந்த சர்க்கரை நோயாளிக்கு தொடர்ந்து ஆங்கில மாத்திரைகளை சாப்பிட்டு வரும்படியும், 'இன்சுலின்' ஊசிகளையும் போட்டு வரும் படியும் கூறிவிட்டு, சித்த முறை மருந்தும் கொடுத்தனுப்பினார்.

ஒரே சமயத்தில் ஆங்கில மருத்துவமும்-சித்த மருத்துவமும் கலந்து இப்படி செய்வது சரியா? ஒரு சித்த மருத்துவர் அப்படி சிபாரிசு செய்யலாமா? விளக்கம் தர வேண்டுகிறேன்.

ப: இது தவருன முறைதான். இதற்கு விடை இதற்கு முந்திய „ அருகம்புல் முறிவு '' ஒன்றே சரியான விளக்கமாகும். இப்படி தமிழ் மருத்துவ முறையைக் கற்றுக்கொண்டு, இன்சுலின் ஊசி, மருந்துகளையும் ராஸ்டினுன் மாத்திரைகளையும் சாப்பிடச் சொல்லி சிபார்சு செய்யும் சித்த மருத்துவர்கள் சரியான வழி காட்டியாகமாட்டார்கள். அவர்கள் பயின்ற மருத்துவ அறிவும் ஆங்கில மருத்துவத்திற்கு அடிமையாகி விட்டது! என்றுதான் பொருள். எனவே அவரையே நீங்கள் மீண்டும் ஒருமுறை கேளுங்கள்; ஆங்கில முறை மருந்துகளையும் சித்த மருத்துவ முறையும் ஒரே சமயம் சாப்பிடச் சொல்வது சரியா? என்று கேளுங்கள். பிறகு எமக்கு எழுதுங்கள்.

கே: நீங்கள் மூலிகைகளின் குணுதிசயங்கள், மருத்துவப் பயன் பற்றி எழுதி வருவது மக்களுக்கு பெருத்த செல்வம் கொடுத் தாற்போல் உள்ளது. பற்பம், செந்தூரம், கட்டு முதலியவைகளைப் பற்றி வெளியிட்டால், பொதுமக்களுக்கு மேலும் நன்மையை உண் டாக்கும். இது ஒரு குறையாக உள்ளது. இதைப் பூர்த்தி செய்யுங்கள்.

ப: பற்பம் செய்வது, செந்தூரம் செய்வது, பலவித பாஷாணங் களை முறித்து கட்டுகள், களங்கங்கள் செய்வது சுலபமான முறையல்ல! பழங்காலத்தே இவைகள் சித்தர்களிடம் 12 ஆண்டுகள் சேவை செய்து பொதுநலனுக்கு ஏற்றபடி இவைகளைக் கற்றுத் தேர்ந்து தான் சித்த மருத்துவர்கள் ஆனுர்கள். அவர்கள் பரம்பரை பரம்பரையாகவே வந்தவர்கள். இன்று அவர்கட்கு ஆதரவு இல்லாமல் அழிந்துவிட்டனர். இன்று பற்பம், செந்தூரம், கட்டு செய்பவர்கள் மிகமிக அரிது. அதனுல் இம்முறைகளை எல்லாம் எளிதில் வெளியிடுவது உசிதமல்ல. இவைகளை அறிய எமது '' மூலிகை மணி மருத்துவப் பயிற்சியில் '' சேர்ந்து தேர்ந்து பயனடையலாம்.

கே: "மார்கழி" இதழில், வெள்ளை ஒழுக்கிற்கு "கட்டுக் கொடி" பயன்படுத்தும்படி கூறி இருக்கிறீர்கள். சிறு கட்டுக் கொடியா அல்லது பெருங் கட்டுக்கொடியா என்பதையும் சமூல மாகவா, இலைகளை மாத்திரமா உபயோகிக்க வேண்டும் என்பதை தெரிவிக்கவும்.

ப: பெருங் கட்டுக்கொடி, சிறு கட்டுக்கொடி இவை இரண்டுமே மருத்துவப் பயனுடையயவை. கொடி, இலை, வேர் இம்மூன்றும் மருத்துவப் பயனுடையனவே என்பதை அறிய வேண்டும்.

கே: எனக்கு வயது 23. திருமணமானவன். தினமும் உடற்பயிற்சி செய்து வரும்போது பாதாம் கோந்தும், பனங் கல்கண்டும் கலந்து உண்டு வருகிறேன். இதனால் ஏற்படும் நன்மை தீமைகளை விளக்கவும். தவிர, இத்துடன் தண்ணீரில் ஊரவைத்த பச்சை கடலையையும் சேர்த்து காலையில் உண்ணலாமா? பச்சை கடலை சாப்பிட்டால், "இருதய வலிவு குன்றும்" என்கிறார்களே இது உண்மையா? தயை கூர்ந்து விளக்கவும்.

ப: பச்சைக் கடலையையும் செம்பரத்தைப் பூ உம், சீமை அத்திப் பழத்தையும் இரவில் மண் சட்டியில் ஊரவைத்துக் காலையில் அடுப்பில் கொதிக்க வைத்து சுண்டிய நீரில் பாலும் சர்க்கரையும் சேர்த்து குடித்து வர இதய நோய் பறந்தே போகும். இந்த முறை மிகவும் அனுபவமான உண்மையாகும். ஆபரேஷன் செய்துதான் தீரவேண்டும் என்ற இதய நோயாளர்கள் கூட தவறாமல் இந்த முறையை 40 நாள் செய்து பிறகு மருத்துவ பரிசோதனை செய்து பார்க்க இதயம் பலமாகி அதில் யாதொரு வித கோளாறும் இல்லை என்பது தெரியும். இது முற்றும் உண்மை.

கே: நான் எவ்வளவு சத்துணவை சாப்பிட்டும் மெலிந்து ஒல்லியாகவே இருக்கிறேன். எடையும் குறைவு தான். ஒரு மாதத்திற்கு முன்பு, மலம் கழியும்போது ஒருநாள், ஒரு சாண் நீளமும், சுண்டு விரல் பருமனுமான புழு ஒன்று வெளியாகியது. அதைக் கொக்கிப்புழு என்றார்கள். இன்னும் புழுக்கள் வயிற்றில் இருக்கலாம். அதனால் தான், உடல் சதை பிடித்து வளர்ச்சி பெற வில்லை என்றும் சொன்னார்கள். பத்து நாட்கள் வேப்பிலையை அரைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டேன். ஒரு புழுவும் வெளி வரவில்லை. இந்நிலையை போக்கவும், உடல் வளர்ச்சி பெறவும் ஒரு வழி கூறவும்.

ப: கொக்கிப்புழுவை நீக்க குப்பைமேனி வேர், காக்கணம் வேர், வேப்ப ஈர்க்கு, நொச்சி இலை, நுணா இலை இவைகளை வகைக்கு 20 கிராம் போட்டு மண் சட்டியில் அரை படி நீர் விட்டுக் காய்ச்சி காலை மாலை 200மில்லியாக ஒரு வாரம் கொடுத்து பேதிக்குதர கொக்கிப்புழு வெளிப் பட்டுப் போகும். உடல் நலம் பெருகும்.

கே: உலகில் மனிதன் இருந்தால் வேலையில் இருக்க வேண்டும். இல்லையெனில் "போதையில்" இருக்க வேண்டும் என்கிறார்களே! போதையில் இருந்தால் குடும்பம் உருப்படுமா?

ப: போதையில் இருந்தால் குடும்பம் எப்படி உருப்படும்? வேலைசெய்து பிழைத்தால்தான் குடும்பம் உருப்படும். ஆனால், பொருள் இதுவல்ல. போதை என்பது மது அல்ல! பேரின்ப போதை. இதில் ஈடுபட்டவர் உலக இன்பத்தில், குடும்பத்தில் நாட்டம் கொள்ள மாட்டார். இறைவனைப் பற்றியே சிந்தனை செய்து யோகம் செய்வார். இதுதான் பேரின்ப "போதை" என்பது. வேலை என்பது செக்குமாடு போல் உலக இன்பத்தில் உழன்று குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது தான் வேலை என்று பொருள் விளங்கியதா?

கே: எனக்கு வயது 17. சில சமயங்களில் கைகால்கள் எல்லாம் தன்னை அறியாமல் நடுங்குகிறது. காலின் கட்டைவிரலை மடக்கினால் நரம்பைப் பிடித்து இழுப்பதுபோல் இழுத்துக் கொள் கிறது. சில நிமிடங்களில் சரியாகிவிடுகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப: நிலப்பனங்கிழங்கு என்ற மருந்து கடைச் சரக்கு. இதனை 50 கிராம் ஒரு குவளை நீரில் போட்டுக் காய்ச்சி சர்க்கரை பால் சேர்த்து 40 நாள் சாப்பிட்டு வர கை கால் நடுக்கம், நரம்பு இழுப்பு எல்லாம் சரியாகிவிடும். ஆனால் மாமிச உணவு, புகைப்பழக்கம், மதுப்பழக்கம் இருப்பின் நிறுத்திவிட்டு செய்வது முக்கியமாகும்.

கே: எனக்கு வயது 30. சுமார் 10 ஆண்டு காலமாக சுய இன்பத்தில் ஈடுபட்டு வருகிறேன். இதனால் பல தீமைகள் உண்டாகும் என்கிறார்கள். இது உண்மையா? இந்த பழக்கத்தை போக்கி நலமடைய ஒரு வழி கூறவும். திருமணம் செய்துக் கொண்டால் குழந்தை பிறக்குமா?

ப: ஒரு ஆண்டு சுய இன்பம் அனுபவித்தாலே இருபது ஆண்டு சக்தி போய்விடுகிறதாக பழம் ஏடுகளில் உள்ளது. "விந்து விட்டான் நொந்து கெட்டான்" என்பது பழமொழி. ஆனால் நீங்கள் 10 ஆண்டு களாக சுய இன்பத்தில் ஈடுபட்டு, பின்பு திருமணம் செய்துக்கொண்டால் குழந்தை பிறக்குமா? என்று கேட்பது விந்தை தான் ஆனாலும் நாள் தோறும் பகலுணவில் அரைக்கீரை, முருங்கைக்கீரை, பசலை கீரை,

தூதுவளைக் கீரை போன்றவற்றை நெய்விட்டு சமைத்து சாப்பிட்டுவர இழந்த சக்தியை ஓரளவிற்குப் பெறலாம். விரைவில் திருமணம் செய்துக்கொள்வது நலம்.

கே : என் வயது 35. எழுதும் பொழுது கை நடுக்கம் ஏற்படுகிறது. இதைப் போக்க ஒரு எளிய முறை கூறவும்?

ப : முருங்கைக் கீரையை நெய்விட்டு வதக்கி பொரியல் செய்து 40 நாள் பகலில் தவறாமல் உணவில் மீண்டும் நெய் சேர்த்து சாப்பிட்டு வரவும். பிறகு எழுதுங்கள்.

கே : வறுமையைத் தரும் கெட்ட நடையுடைகள், பழக்க வழக்கங்கள் யாது?

ப : தலையைச் சீவி நெற்றியில் தொங்க விடுவதும் மீசையை தொங்கப்போடுவது போல் வைப்பதும், கால் கழுவி விட பின்னங்கால் நீரில் நனையாமல்இருப்பதும், மெல்லிய இறுக்கமான ஆடைஅணிவதும், சோறு உண்ணும்போது பந்து உருட்டுவது போல் செய்வதும், தன்னை விட வயதில் மூத்தவரைக் கண்டு முகம் சுளிப்பதும், மணமான பெண்கள் மற்ற ஆடவர் முகத்தை உற்றுப் பார்ப்பதும், கணவன் (மனைவியைத் தவிர) மற்றவர்களை ஏறிட்டுப் பார்ப்பதும், வழிபாடுகளில் வாய்விட்டு பாடாத மனமும், குளித்த பின்பு கொல்லைக்கு (மலசலம்) போவதும், வழிபாட்டிற்கு பிறகு கைகால் கழுவுவதும் வறுமையை 'வா' வென்று அழைக்கும் செயல்களாம்!

கே : இளவயதில் முடக்கு வாதம் (ருமேடிசம்) வந்து குணம் கண்டாலும், வயதான பின் அந்நோய் இருதயத்தை தாக்கி அதனால் மூச்சுத் திணரல், இருதய பலவீனம் போன்ற நோய்கள் பலருக்கு வருகின்றன. அவ்வாறு இருப்பவர்களுக்கு நோய் தீர என்ன மருத்துவம் செய்யலாம்? இருதயம் பலம்பெற என்ன ஆகாரம் புசிக்கலாம்?

ப : சீமை அத்திப்பழம் 1, மருதம்பட்டை 10 கிராம், செம்பரத்தம் பூ-4 எடுத்து 1 குவளை நீர் விட்டுக் காய்ச்சி அரை குவளையாக்கி பால் சர்க்கரை சேர்த்து காலை மாலை பருகிவர இருதய பலவீனம் நீங்கிப் போகும்.

கே : தங்களின் மூலிகை பயிற்சிக் கட்டணம் சற்று அதிக மாக காணப்படுகிறதே !

ப : இந்தப் பயிற்சி வெறும் ஏட்டுப் படிப்பு எம். பி. பி. எஸ். போன்றது அல்ல ! மூலிகைப் பயிற்சியில் ஒரு சில மூலிகைகளை பல ஆண்டுகளாக அலைந்து திரிந்து தெரிந்துக்கொள்ள வேண்டியுள்ளது. யான் ஒரு மூலிகையைப் பற்றித் தெரிந்துக்கொள்ள 10 ஆண்டுகள் கடந்துள்ளது. எனவே, பயிற்சிக் கட்டணம் அதிகமில்லை என்றே நினைக்கலாம்.

கே : மூங்கில் புல்லுருவி, நத்தைச்சூரி இவைகளின் மருத்துவ பயன் என்ன ? எப்படி உபயோகிக்க வேண்டும். தீரும் நோய்கள் யாவை ? தெரிவிக்கவும்.

ப : இவைகளைப் பற்றி தனித்தனியே வெளியிட்டு மற்றவர்களும் அறியச் செய்வதுவே மூலிகை மணியின் குறிக்கோள். பின்னர் வெளி யாகும்.

கே : கடந்த 5 வருடங்களாக இலேசாக சர்க்கரை நோய் இருந்து வருவதால், மூலிகை மணியில் கண்டவாறு ஆவாரம் செடி சமூலம் இடித்து தூள் செய்து சாப்பிட்டு வருகிறேன். இரண்டு மண்டலங்கள் கழிந்துவிட்டன. சுகம் கண்டேன். இப்பொழுது டீ, காபி, அரிசி சாப்பிடலாமா ? சேர்ப்பதால் மீண்டும் கெடுதல் ஏற்படுமா ? விளக்கம் தரவும். பூரண குணம் காண வழியும் கூறவும்.

ப : உணவுப் பொருள்களில் சர்க்கரை அதிகமாக்கும் பொருள் களை "சர்க்கரை நோய்" உடையவர்கள் குறைத்து உண்பது மிகவும் சிறப்பு. எனவே டீ காபி, அரிசி, உணவுப் பொருள்களை சேர்த்துப் பாருங்கள். அதில் சர்க்கரை சத்து அதிகமானால் அவைகளை மீண்டும் கட்டுப் படுத்த உணவை எடுப்பதுதான் அறிவுடைமையாகும்.

கே : என் வயது 20. திருமுருகன், விநாயகர் பக்தன். தீய பழக்கங்கள் எதுவும் என்னிடம் கிடையாது. என்னிடம் ஒரு சில அறிகுறிகள் தோன்றுகின்றன. ஒரு விஷயத்தை நினைத்து, அதை மறந்த உடன், 10 அல்லது 20 நிமிடங்களுக்குள், நினைத்தபடி காரியம் என் கண் முன்னால் நடக்கின்றது. உதாரணமாக, ஒரு விருந்தாளி எங்கள் விட்டுக்கு வருவார் என்று மனதில் நினைத்து

மறந்த சிறிது நேரத்தில், வருந்தாளி வந்து கண்முன் நிற்கிறார். இது ஏற்படும் நோக்கம் என்ன ? தங்கள் கருத்தினை தெரிவிக்கவும்.

ப : திருமுருகன், விநாயகர் பக்தன் எவராக இருப்பினும், அவர் உண்மையான பக்தராக இருப்பின் அவருக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதனை முருகனும், விநாயகனும் முன்னோடியாக நின்று அறிவிப்பார்கள். நினைப்பது நீயல்ல ! விநாயகரும் முருகனும் உன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்துள்ளபடியால் நீ நினைக்கிறாய் ! இருபது வயதிலேயே இப்படி ஓர் வாய்ப்பினை பெற்ற நீர் பாக்கியசாலியே !

கே : என் வயது 40. 5 வருடங்களுக்கு முன்பு ஒரு ஓட்டு வீட்டில் தனியாக படுத்திருந்தபோது, பயங்கரமான சுழல் காற்று இரைச்சலுடன் வீசியது. திருடர்கள் பயத்தினாலும், காற்றின் இரைச்சலினாலும் அதிக பயம் ஏற்பட்டு, உடல் ஜில் என்று புல்லரித்தது. இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் போய்விட்டது. அன்று முதல் ஆண்மை குறைந்துவிட்டது. இந்த நிலையில் என் உடல் சீரடைந்து ஆண்மை பெற ஒரு வழி கூறவும்.

ப : இயற்கையின் கோளாறால் வந்த இந்த தொல்லைக்கு மருந்து தேவை இல்லை. தூதுவளை, கரிசாலை, அரைக்கீரை போன்ற பசுங்கீரைகளை பகல் உணவில் நெய்யுடன் சேர்த்து வந்தாலேயே உங்கள் குறைபாடுகள் நீங்கிப்போகும். இரண்டொரு மாதம் பொறுமையுடன் செய்து வந்தால் குணமடையலாம்.

கே : "போகர் பன்னீராயிரம்" என்ற நூல் எங்கு கிடைக்கும்.

ப : அந்த நூல் இப்பொழுது அச்சுவடிவில் விற்பனையில் இல்லை. யாராவது பழம்பெரும் அன்பர்கள் கையில் எட்டுப் பிரதியாக இருக்கக் கூடும். அதனை மனமுவந்து கொடுக்க முன்வந்தால், அச்சாக்கி எதிர் கால மக்கள் பயனடையச் செய்யலாம். அந்நூலுக்கு சன்மானமும் வழங்கலாம்.

கே : எங்கள் ஊரில் வேலிபருத்தி என்னும் கொடிக்கு வேறு பெயர் என்ன ? இது பற்றி கட்டுரை வந்துள்ளதா ?

ப : ' வேலிப்பருத்திக்கு பொதுவாக உத்தாமணி என்பார்கள். ஏற்கனவே தினமணி சுடரில் எமது கட்டுரை வெளியாகியுள்ள. இதை பற்றி விரிவாக அறிய விரும்பினால் எமது "நம் நாட்டு மூலிகைகள்" முதல் பாகத்தை வாங்கிப் படித்து பயன்பெறலாம்.

உ
முருகா.



— முன் மாதத் தொடர்ச்சி

பித்த மயக்கத்திற்கு

இஞ்சிச் சாறு 200 மில்லி, அசல் நல்லெண்ணெய் 200 மில்லி, இரண்டும் கூட்டி காய்ச்சி மெழுகு பதமாக காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு தலைக்குத் தேய்த்து வாரம் ஒரு முறை குளித்துவர வேண்டும். இதனால் பித்த மயக்கம் (பிளட் பிரஷர்) என்ற மயக்கம், மண்டை இடி, வாத நோய்கள் யாவும் நீங்கிப் போகும்.

மூர்ச்சை போட்டு மயங்கி விழும் நோய்களுக்கு

அதிமதுரம், சிறு தேக்கு, பனங்கல்கண்டு, வகைக்கு 20 கிராம் சிதைத்துப் போட்டு, 200 மில்லி தண்ணீர் விட்டு கொதிக்கக் காய்ச்சி, 100 மில்லியாகச் சுண்டவைத்த குடிநீரை தினமும் காலை உட்கொள்ள மயக்கம், தாகம், உட்சூடு, மயக்கத்தால் கீழேவிழுதல் ஆகியன நீங்கும்.

சோகை, பாண்டு நீங்க

சிறு செருப்படை, குப்பைமேனி, கரிசாலை ஆகியவைகளை உலர்த்தி தூள் செய்தது வகைக்கு 50 கிராம் கற்கண்டு தூள் 20 கிராம் கலந்து வைத்துக்கொண்டு காலை மாலை ஒரு சிட்டிகை விதம் 40 நாள் சாப்பிட சோகை, காமாலை, எரிபித்தம், மதி மயக்கம், நீர்க்கட்டு, மலச் சிக்கல் ஆகியன நீங்கும்.

மேக வெட்டை, மூலச் சூடு, பித்தக் காந்தல்

சிவகரந்தையை உலர்த்திப் பொடி செய்து 50 கிராம், கற்கண்டு தூள் 50 கிராம் கலந்து வைத்துக் கொண்டு ஒரு சிட்டிகை விதம்

10 நாள் காலை மாலை சாப்பிட்டு பசும் பால் குடிக்க மேற்கூறிய நோய்கள் யாவும் விலகிப் போகும்.

நாள் பட்ட ஒற்றைத் தலைவலிக்கு மருந்து

கரிசாலை, கீழாநெல்லி, பொன்னாங்கண்ணி, இஞ்சி ஆகியவைகளை இடித்து எடுத்த சாறு வகைக்கு 200 மில்லி விதம் ஒன்றாக கலந்து அதில் கருஞ்செம்பைப் பூ, மிளகு, பூலாங்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி ஆகியவைகளை வகைக்கு 10 கிராம் எடுத்து உலர்த்தி இடித்து தூள் செய்து அதில் 500 மில்லி நல்லெண்ணெயும் முன் கூறிய மூலிகைச் சாற்றையும் ஒருங்கே கலந்து சிறுதீயாக காய்ச்சி முடியும்போது பால் சாம்பிராணியும் 10 கிராம் பொடித்துப் போட்டு வடிகட்டி வைத்துக் கொண்டு வாரமிருமுறை காலையில் தலைக்குத் தேய்த்து முழுக வேண்டும். அன்று புளி இல்லாத மிளகு நீர் (ரசம்) சோறு சாப்பிட வேண்டும். இதனால் ஒற்றைத் தலைவலி, மூக்கு பீனிசம், மூலச் சூடு, தலை கிறுகிறுப்பு மயக்கம் தீரும்

பித்தக் குடி நீர் முறை

சுக்கு, சீரகம், பேய்ப்பீர்க்கு, சீந்தில், பற்பாடகம், கொத்தமல்லி இவற்றில் வகைக்கு 20 கிராம் சேர்த்து அத்துடன் 500 மில்லி தண்ணீர் விட்டுக் காய்ச்சி பாதியாக்கி 3 நாட்கள் கொடுக்க பித்தத்தால் வந்த எல்லாத் தொல்லையும் நீங்கிப் போகும்.

(தொடரும்)

அனுபவம் உணர்த்தும் உண்மை

M. V. சோமநாதன்,

80, யானைக்கல் வீதி,
மதுரை-1.

மருத்துவர், திரு. கண்ணப்பர் அவர்களுக்கு,

தங்களின் 'பயன் தரும் பத்துக் கீரைகள்' புத்தகம் மூலம் நான் நலம் அடைந்து வருகிறேன். சிறு வயதில் அறிந்தோ, அறியாமலோ செய்ய தீயநடவடிக்கைகளால் என்னால் இப்பொழுது தாம்பத்ய உறவில் நிறைவு காணமுடியாமலிருந்தேன். தங்கள் நூலில் கூறியிருந்தபடி அரைக்கீரை, முருங்கைக் கீரை, தூதுவளை, பசளைக்கீரை போன்றவைகளை தொடர்ந்து 10-நாட்கள் சாப்பிட்டேன். எனக்கே ஒரு புதுதெம்பு உண்டாகி நரம்புகள் வலுவடைந்த மாதிரி இருக்கிறது. இதற்குள்ளேயே தாம்பத்ய உறவில் ஓரளவு காணுகிறேன் என்பதை நன்றியுடன் தெரிவிக்கிறேன்.

பெ. மகிமைநாதன்,
ஆசிரியர்.

அ. வெள்ளோடு S O
திண்டுக்கல் வட்டம்.

அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

என் தாயாருக்குக் கண் பார்வை குறைந்துக் கொண்டே வந்தது. டாக்டர்களிடம் காட்டியதில் சிலர் சில மருந்துகள் கொடுத்தனர். இருவர் ஆபரேஷன் செய்யவேண்டும் என்றனர். ஆபரேஷன் செய்ய எனக்கு விருப்பமில்லை. இந்த நிலையில் தான் எனது தாயார் "நேத்திரப் பூண்டுத் தைலத்தை" உபயோகித்து வருகின்றார். முன்பு இருந்ததை விட இப்பொழுது கண்ணிற்கு இதமாக இருப்பதாகவும், இந்த தைலத்தை உபயோகித்த பிறகு தான் அந்தசுகம் கிடைத்துள்ளதாகக் கூறினார்கள். இப்படி அற்புதமாக கண் பார்வையில் ஏற்பட்ட குணத்தையும், சுகத்தையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MOOLIGAI MANI Regd. No. M. 8354

இதய ஒலி!

சிற்றம்பல குருசுவாமி (வைத்தியர்)
உச்சிகாளியம்மன் கோவில்,

7—2—74
மவுன்சுபுரம் 3-வது சந்து,
திண்டுக்கல்.

உயர்திரு டாக்டர் அவர்களுக்கு, வணக்கம்.

தாங்கள் ஆற்றிவரும் மருத்துவத் தொண்டு உலகிலேயே ஈடு இணையற்றது. தமிழ்நாட்டில் தோன்றிய பெரியார்களின் வரிசையில் தாங்களும் இடம் பெற்று விட்டீர்கள் என்றால் மிகையாகாது. மார்கழி இதழில் தாங்கள் பெரியாரைப் பற்றி எழுதிய இரங்கல் கட்டுரை என் மனதை உலுக்கியது. இரத்தினச் சுருக்கமாக எழுதியிருந்தது போற்றத் தக்கது.

இப்படிக்கு, சிற்றம்பல குருசுவாமி.

18—10—73
விஜயராகவன்,
சென்னை.

மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

இன்று மரங்களை வெட்டிக்கொண்டே வருகிறார்கள். கோயில் களில் உள்ள நந்தவனம், விருட்சங்கள் கூட அழிந்து வருகின்றன. எவ்வளவோ மகான்கள் செய்து வரும் சேவையை இந்த மரங்கள் செய்து வருகிறது. இதை பற்றி அரசாங்கமோ மனிதர்களோ உணராது இருக்கிறார்கள். இயற்கைத் தாவர வளர்ச்சிக்காக தாங்கள் செய்து வரும் சேவை போற்றத் தக்கது. புற்றிசல் போல காலத்தை விரயம் செய்யும் புத்தகங்களும், சினிமா விளம்பரங்களும் மனிதர்களுடைய குணத்தையே கெடுத்து விடுகிறது. நல்ல கொள்கையற்ற பல்லாயிரக் கணக்கான பத்திரிகைகளைக் காட்டிலும் தங்களுடைய ஒரு பத்திரிகையே போதும். இந்த சேவையை தொடர்ந்து செய்து வர ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.

அன்பன், விஜயராகவன்.

1—10—73
எஸ். சின்னப்பன்,
கம்பாசிட்டர்,
அசோக்நகர், சென்னை-83.

அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம்.

சித்த மருத்துவம் என்பதும், சித்தர்கள் இருந்தார்கள் என்பதும் ஏழைகளுக்கு கண்ணில் படாத கருத்தில் எட்டாத கனிச் சுரங்கங்களாக இருந்தது. ஆயினும் தங்களின் சேவையால், ஏழை எளிய மக்களும், ஏன் நாணயமும் சிந்திக்கும் அறிவுமுள்ள சமுதாயமும் பயனடைகிறது. மூலிகை மணி சந்தாதாரர்கள் அதிகமாக நானும் உழைப்பேன்.

தங்கள் நன்றியுள்ள, எஸ். சின்னப்பன்.

மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும். ஆசிரியரும் வேலூர் மருத்துவர் ஆ. ரா கண்ணப்பர், 59. மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (வ. ஆ.)